


09.12. 2024

தலைப்புச் செய்திகள்

- சுயசார்பு இந்தியா இயக்கம் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை உலகளவில் ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர். திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இருஅவைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.
- மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை ரத்துசெய்ய கோரி கொண்டுவரப்பட்ட தனித்தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.
- திருச்சி, உய்யகொண்டான் கால்வாயை சீரமைக்கும் பணி விரைவில் நடைபெறும் என்று, மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.
- மகளிர் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

சுயசார்பு இந்தியா இயக்கம் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை உலகளவில் ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர். திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஜெய்பூரில் 3 நாள் உச்சி மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், நாட்டின் அனைத்து துறைகளும், சீர்த்திருத்தம், செயலாக்கம், மாற்றங்கங்களுடன் விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக கூறியுள்ளார்.
வல்லுநர்களும், முதலீட்டாளர்களும் நம்நாட்டின் வளர்ச்சியை வியப்புடன் கண்நோக்குவதாக எடுத்துரைத்தார்.

தொழில்நுட்பம் மற்றும் தரவுகளை அடிப்படையாக கொண்ட இந்த நூற்றாண்டில், ஜனநாயகம் மக்கள் தொகை போன்றவற்றின் ஆற்றலை இந்தியா பிரதிபலிப்பதாக சுட்டிக்காட்டினார்

மின்னணு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருவதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

ஆஸ்திரேலியா, எகிப்து, ஃபின்லாந்து, ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தொழில் நிறுவன பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

பிரதமர் - பீமா சஹி

பிரதமர் திரு. நரேந்திரமோடி ஹரியானா மாநிலம் பானிபட்டில் எல்.ஐ.சி. நிறுவனம் சார்பில் பீமா சஹி திட்டத்தை இன்று தொடங்கிவைக்கிறார்.

2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடையும் நோக்கிலும் 3 வருடங்களில் 2 லட்சம் மகளிரை தற்சார்ப்பு உடையவர்களாக உருவாக்கும் வகையிலும் இத்திட்டம் தொடங்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

கிரண் ரிஜுஜு

இந்திய நாட்டிற்கு எதிரான சக்திகளுக்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஒருங்கிணைந்து போராட நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், அண்மையில் பொதுவழியில் வெளியான செய்தியை மேற்கோள் காட்டி மூத்த காங்கிரஸ் கட்சி தலைவருக்கும், வெளிநாட்டு நிறுவனத்திற்கும் தொடர்பு இருப்பதாக அதில் வெளியான செய்தியை சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பிரபல வணிக நிறுவனத்திற்கு எதிராக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட பிரச்சனைகளில் அமளி நிலவியதால் நாடாளுமன்ற இருஅவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், இப்பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சியினர் முழக்கமிட்டதை தொடர்ந்து கேள்வி நேரத்தை நடத்த ஒத்துழைக்குமாறு உறுப்பினர்களை அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா கேட்டுக்கொண்டார்.

ஆனால் உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சல் குழப்பங்களில் ஈடுபடவே அவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் இப்பிரச்சனைகள் குறித்து விவாதிக்க எதிர்கட்சிகள் கொண்டுவந்த ஒத்திவைப்பு நோட்டீஸை அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் நிராகரிக்கவே, உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை முதலமைச்சர்

மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை ரத்துசெய்ய கோரி கொண்டுவரப்பட்ட அரசின் தனித்தீர்மானம் சட்டப் பேரவையில் இன்று ஒருமானதாக நிறைவேறியது.

முன்னதாக இந்த தீர்மானத்தின் மீது பேசிய முதலமைச்சர், மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க தமிழக அரசு ஒருபோதும் அனுமதி வழங்காது என்று திட்டவட்டமாக குறிப்பிட்டார்.
மத்திய அரசு, இந்த சுரங்கத்தை அமைக்க ஏலத்திற்கு அனுமதி அளித்தாலும், அதனை நிறைவேற்ற தமிழக அரசு அனுமதிக்காது என்று உறுதியளித்தார்.

இந்த சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்யுமாறு பிரதமருக்கு ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளதை முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக ஏலத்தின் தொடக்க நிலையிலேயே மாநில அரசு இதை தடுத்து நிறுத்தியிருக்க வேண்டுமென்று எதிர்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி கூறியதற்கு பதிலளித்த முதலமைச்சர், இதுதொடர்பாக பிரதமருக்கும், மத்திய சுரங்கத்துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதியதை சுட்டிக்காட்டினார்.

இதற்குரிய சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்ததாகவும், முதலமைச்சர் குறிப்பிட்டார்.

முன்னதாக தமிழக சட்டப்பேரவையில் முன்னாள் உறுப்பினர்கள் மறைவிற்கு இரங்கல் குறிப்புகளும், முக்கிய தலைவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதனைத்தொடர்ந்து மறைந்த பெருந்தகைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖

துரைமுருகன்

திருச்சி மாவட்டம், உய்யகொண்டான் கால்வாயை சீரமைக்கும் பணி விரைவில் நடைபெறும் என்று, நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்
சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதை தெரிவித்த அவர், சோமரசம்பேட்டை பகுதியில் தடுப்பணை கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறினார்.

சிறிய அளவிலான தடுப்பணைகள் கட்டுவதற்கும் கால்வாயை தூர்வாரவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

காட்டுமன்னார் கோவில் தொகுதிக்கு உட்பட்ட ஆதனூர் தடுப்பணை பகுதியில் சேர்ந்துள்ள மணல் மேடுகளை அகற்றி, விரைவில் மதகுகள் திறப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றார்

கடந்த 2 ஆண்டுகளில் 90 அணைகள் கட்டப் பட்டிருப்பதாகவும், முன்னுரிமை அடிப்படையில் இந்த ஆண்டு தடுப்பணைகள் கட்டப்படும் என்றும் கூறினார்.

தற்போது, மழை வெள்ளத்தால் சேதமடைந்த பாலங்களை சீரமைக்க தற்காலிக பணிகள் மற்றும் நிரந்தர தீர்விற்கான பணிகளை மேற்கொள்வதற்கு கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்

கணக்கெடுப்பு பணிகள் முடிந்தவுடன் போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெறும் என்றார்.

❖❖❖❖❖❖❖

கே.என். நேரு

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதியில், 61 கோடி ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்தார்.

பேரவையில் கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், புதிய நகராட்சி பகுதிகளில் இட பற்றாக்குறை காரணமாக அருகிலுள்ள ஊராட்சிகளையும் இணைத்து, புதிய இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்

கன்னியாகுமரி மாவட்டம், இறையம்மன் துறை பகுதியில் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்,

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றார்.

மதுரை மாநகராட்சியில் இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவில் கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர்,

ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் புறநகர் பகுதிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார்.

மதுரை வைகையாற்றின் தென்கரை பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்றும் கூறினார்.

நாகை நகராட்சியில் சாலை குடிநீர் உள்ளிட்ட அனைத்து திட்டப்பணிகளும் மேற்கொள்ளப்படும் என்றார்

மாநிலத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகள், கால்வாய் சீரமைப்பு பணிகள் உள்ளிட்டவற்றை செயல்படுத்துவதற்காக மாநில அரசு 24 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருப்பதாகவும், விரைவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

பேரவையில் கேள்விநேரத்தின் போது வெளியான மேலும் சில தகவல்கள் :

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 544 புதிய நியாய விலைக் கடைகள், ஆயிரத்து 26 பகுதிநேர கடைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும்,

தேவைப்படும் இடங்களில் புதிய கடைகளுக்கு ஆவன செய்யப்படும் என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

...

பணிபுரியும் மகளிர் தங்குவதற்காக 200 படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய விடுதிகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

மேலும், 26 கோடி ரூபாய் செலவில், கோவை, சென்னை, மதுரை உள்ளிட்ட பகுதிகளில் புதிய விடுதிகள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்

...

தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் சிறப்பு பேருந்துகள் விரைவில் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.S.S.சிவசங்கர் கூறினார்.

கலசப்பாக்கம் தொகுதியில் புதிய பேருந்து நிலையம் விரைவில் அமைக்கப்படும் என்றார்.

...

தமிழக திருக்கோவில்களிலிருந்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள், தங்கம், வெள்ளி, தாமிர பட்டயங்கள்

கண்டெடுக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்தார்.

மாநிலம் முழுவதும் கடந்த மூன்றரை ஆண்டுகளில் மூவாயிரத்து 350 திருக்கோவில்களில் குடமுழுக்கு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

உடுமலை பேட்டை தொகுதிக்குட்பட்ட மாக்கினாப்பட்டி கிராமத்தில் உள்ள உயர்நிலை பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் கட்டிடம் மற்றும் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவத்துள்ளார்.
வழக்கமான நித ஒதுக்கீட்டை விட இந்தாண்டு ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாக பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பெருநகர சென்னை மாநகராட்சிகுட்பட்ட 5 கோட்டங்களில் புதைவட மின்கம்பிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

தேவைக்கேற்ப மின்மாற்றிகளும், துணைமின் நிலையங்களும் அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

துணை மதிப்பீடுகள்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2024-25-ம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு பேரவையில் இன்று முன்மொழிந்தார்.

இத்துணை மதிப்பீடுகள் மொத்தம் 3 ஆயிரத்து 531 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு வழிவகை செய்யும்.

❖❖❖❖❖❖❖

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் வேளாண் துறை சார்பில் நடைபெறவுள்ள சிறப்பு மண் பரிசோதனை முகாமை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித் தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் ஒத்தபட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டத்தின் கீழ் 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய மெட்டல் சாலை அமைக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகே, புஷ்பவனம் கடற்கரையில், மியான்மர் நாட்டைச் சேர்ந்த மூங்கில் மரத்தாலான மீன்பிடி படகு கரை ஒதுங்கியுள்ளதாக, எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

திண்டுக்கல் வாய்ஸ்

திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை ஒட்டி பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் வரும் வெள்ளிக்கிழமை பூஜை நேரம், படிவழி பயணம் ஆகியவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

ஹாக்கி

மஸ்கட்டில் மகளிர் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் Pool-A பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

இரவு எட்டரை மணிக்கு இந்த போட்டி தொடங்கும்

❖❖❖❖❖❖❖

ஸ்குவாஷ்

ஹாங்காங்கில் நடைபெறும் உலக மகளிர் ஸ்குவாஷ் சாம்பியன் பட்ட போட்டியில் இந்தியா இன்று பிற்பகல் பெல்ஜியத்துடன் மோதுகிறது.

முன்னதாக இன்றுகாலை நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா கொலம்பியாவை 2-1 என்ற செட்களில் வென்றது.

ஆடவர் பிரிவில் இந்தியா - கொலம்பியாவை தற்போது எதிர்கொண்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.